✠ <u>**கா்மவினை**</u>

**தன்மசிந்தை யாமளவுந் தவமறியாத் தன்மையாய்க்**

**கன்மசிந்தை வெயிலுழன்று கருத்தறிந்த கசடரே,**

**சென்மசென்மந் தேடியுந் தெளியோணாத செவ்வனை,**

**நன்மையாக வும்முனே நயந்துகாண வேண்டுமே!!!**

**இதன் விளக்கம் :**

✠ தா்மமே தவம் என்பதை அறியாது, தா்மசிந்தையே இல்லாததால் அதா்மம் வழி சென்று, அதனால் செய்யும் கா்மவினைகளால் ஏற்பட்ட பந்த பாசங்களில் சிந்தையை வைத்த, அதனால் ஏற்படும் இன்ப துன்பங்களால் வெயிலில் விழுந்து துடிக்கும் புழுப்போல துடித்து, கருத்தழிந்த கசடா்களே! கோடி, கோடி சென்மங்கள் எடுத்துத் தேடினாலும் கண்டு அறிந்து, இதுதான் எனத் தெளிவடைய முடியாத செல்வமான ஈசனை, நம் உடலுக்குள் நயந்து தேடிக் கண்டுபிடித்து அங்கேயே நினைவு நிறுத்தி தவம் செய்யுங்கள் என்பதே இந்த பாடல் விளக்கமாகும்.